வர்த்தகம், வாணிபம், உணவுப் பாதுகாப்பு மற்றும்
கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு

**கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனம்**

# பதவி வெற்றிடங்கள்

கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனத்தின் தலைமை அலுவலகத்திற்காக பின்வரும் பதவி வெற்றிடங்களுக்காக இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

## 1. பிரதான நிறைவேற்று அதிகாரி Chief Executive Officer

**சம்பள அளவு : HM 2-1 - 2025** ரூபா **[161,140 - 12 x 4,850 – 219,340]**

**தகைமைகள் :**

1. இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் வியாபார முகாமைத்துவம், வியாபார நிர்வாகம், மனித வள முகாமைத்துவம், சந்தைப்படுத்தல், கணக்கியல் அல்லது வர்த்தகத்தில் ஒரு இளமாணிப் பட்டம்

   **மற்றும்**

   தொடர்புடைய துறையில் பட்டப் பின்படிப்புத் தகைமை (masters’) அல்லது பதவியுடன் தொடர்புடைய பாடப்பரப்பில் அங்கீகரிக்கப்பட்ட பட்டய தொழில்சார்ந்த நிறுவனமொன்றின் இணை அங்கத்துவம்

   **மற்றும்**

   ஆரம்பப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டதன் பின் கூட்டுத்தாபனம், சபை அல்லது கீர்த்தி வாய்ந்த தனியார் துறை நிறுவனமொன்றில் நிரூபிக்கப்பட்ட சாதனைப் பதிவுகளுடன் ‘‘முகாமைத்துவ மட்டத்தில்’’ குறைந்தபட்சம் பதினேழு (17) வருடகால அனுபவம் இதில் ஐந்து (05) வருட காலம் சிரேஷ்ட முகாமைத்துவ நிலையிலாக இருக்க வேண்டும்.

2. இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் வியாபார முகாமைத்துவம், வியாபார நிர்வாகம், மனித வள முகாமைத்துவம், சந்தைப்படுத்தல், கணக்கியல் அல்லது வர்த்தகத்தில் ஒரு இளமாணிப் பட்டம்

   **மற்றும்**

   தொடர்புடைய துறையில் கலாநிதிப் (PhD) பட்டம்

   **மற்றும்**

   கலாநிதிப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டதன் பின் கூட்டுத்தாபனம், சபை அல்லது கீர்த்தி வாய்ந்த தனியார் துறை நிறுவனமொன்றில் நிரூபிக்கப்பட்ட சாதனைப் பதிவுகளுடன் ‘‘சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில்’’ குறைந்தபட்சம் ஐந்து (05) வருடகால அனுபவம்.

   ❖ 2024-01-12ஆம் திகதிய 01/2024ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றுநிருபத்தின் பிரகாரம் விசேட கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

மேற்கூறிய தகைமைகளைக் கொண்டுள்ள விண்ணப்பதாரர்கள் சுயமாகத் தயாரித்துக்கொண்ட விண்ணப்பப் படிவங்களை 2026-08-31ஆம் திகதி அல்லது அதற்கு முன் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பதவியின் தலைப்பைக் குறிப்பிடவும்.

**தலைவர்,**
**கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனம்,**
**இல. 27, வொக்ஷோல் வீதி,**
**கொழும்பு - 02.**